## 1976, பிப்ரவரி 3 அன்று, ‘அண்ணா நினைவிடத்திற்கு வரமுடியாதவர்கள்’ பட்டியலில் இடம் பெற்றிருந்த

# முதல்வர் மு.க.ஸ்டாலின் - பேரறிஞர் அண்ணா நினைவிடத்தில் அஞ்சலி!

## வரலாற்று நிகழ்வின் பதிவு!

சென்னை, பிப்.4–

**1976 பிப்ரவரி 3 அன்று, அண்ணா நினைவிடத்திற்கு வரமுடியாதவர்கள் பட்டியலில் இடம்பெற்றிருந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கழக முன்னணியினர், உடன் பிறப்புகள் உள்ளிட்ட பல்லாயிரக்கணக்கானவர்களுடன் நேற்று அண்ணா நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினார்.**

நேற்று பேரறிஞர் அண்ணா அவர்களின் 57வது ஆண்டு நினைவு நாள். பச்சையப்பன் கல்லூரியில் படித்து எம்.ஏ. பட்டம் பெற்று, 5 ஆம் வகுப்பு வரை மட்டுமே படித்த தந்தை பெரியார் அவர்களைத் தலைவராக ஏற்று, அவரது கொள்கைப்படி வாழ்ந்து, அந்தக் கொள்கைக் கொடி உயர வாழ்நாள் முழுதும் பாடுபட்டவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் காடு மேடுகளில் எல்லாம், பட்டி தொட்டிகளில் எல்லாம், சுற்றிச்சுற்றி வந்து தமிழ்மொழியும், தமிழ்நாடும், தமிழ் மக்களும் தலைநிமிர்ந்து தன்மானத்துடன் வாழ வேண்டும் எனும் உணர்வோடு உழைத்தவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் முதலான இரண்டாம் நிலை தலைவர்களை அரவணைத்து அவர்களையும் வழிநடத்தி, திராவிட முன்னேற்றக் கழகம் எனும் பேரியக்கத்தை உருவாக்கி 18 ஆண்டுகளில் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்!

நம்முடைய மாநிலத்திற்கு, “தமிழ்நாடு” எனும் பெயர் சூட்டி தந்தை பெரியார் அவர்கள் தந்த சுயமரியாதைத் திருமணம் செல்லாது என்று சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பைக் கண்டு, சுயமரியாதைத் திருமணத்திற்குச் சட்ட அங்கீகாரம் வழங்கவேண்டும் என்னும் உறுதியோடு, தந்தை பெரியார் அவர்களின் ஆலோசனைகளையும் ஏற்று, சுயமரியாதைத் திருமணம் செல்லும் எனும் சட்டம் இயற்றி, அதுவரை நடைபெற்று, நீதிமன்றம் செல்லாது என உரைத்த அத்தனை திருமணங்களும் செல்லும் எனும் நிலைமையை உருவாக்கிய மாமேதை அவர்!

அதுமட்டுமல்ல, மும்மொழித் திட்டத்தை ஏற்க வேண்டும் இல்லையேல் தமிழ்நாடு அரசுக்கு சமக்ர சிக்ஷா திட்டத்திற்கு நிதி வழங்க முடியாது என்கிறார்களே, அந்த மும்மொழித் திட்டம் தமிழ்நாட்டிற்குத் தேவையில்லை. தமிழ், ஆங்கிலம் இருமொழிகள் மட்டுமே தமிழ்நாட்டில் கற்பிக்கப்படும்; இனி, இந்திக்கு இங்கே இடமில்லை எனச் சட்டம் நிறைவேற்றியவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

அந்த இருமொழிச் சட்டத்தால்தான் ஆங்கிலம் தமிழ்நாட்டில் கற்பிக்கப்பட்டு தமிழ்நாட்டு இளைஞர்கள் உலகம் முழுவதும் வேலைவாய்ப்புகளைப் பெற்றுப் பொருளாதாரத்தில் உயர்வதற்கு வழிவகுக்கப்பட்டது. இந்தி மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட உத்திரபிரதேசம், மத்தியபிரதேசம் முதலான மாநிலங்களில் இருந்து பிழைப்புக்காக இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் தமிழ்நாட்டிற்குக் குடும்பம் குடும்பமாக வருகிறார்களே, அவர்களுக்கு இந்தி மொழி வாழ்வளிக்க வில்லை. தமிழ்மொழிதான் ஆங்கிலம்தான் அவர்களுக்கும் இன்று வாழ்வளிக்கும் உன்னத நிலையைப் படைத்துள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இதனை ஒவ்வொரு மேடையிலும் எடுத்துச் சொல்கிறார்கள். ஒன்றிய அரசுக்கும் கடிதங்கள் வாயிலாக தெரிவிக்கிறார்கள். ஆனாலும், இந்தி மொழியுடன் சமஸ்கிருதத்தையும் திணிப்பதிலேயே குறியாக இருக்கிறது ஒன்றிய அரசு.

ஆனாலும், அண்ணா அன்று வகுத்த சட்டம்தான் இன்று மட்டுமல்ல. என்றும் தமிழகத்தில் தொடரும் என்று முழங்குகிறார் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்!

அண்ணாவின் புகழ் என்றும் நிலைத்து நிற்கும். ஏனெனில் இந்த மண்ணை வளப்படுத்திட தமிழ்நாட்டை முன்னேற்றிட, தமிழ்மக்களை உயர்த்திட தமிழ்மொழியைக் காத்திட அவர் காட்டிய வழி இணையற்றது. இன்று இந்தியாவின் ஏனைய மாநிலங்களிலும் எதிரொலிக்கிறது அந்த வழி! அந்த அற்புதமான வழியை நமக்கு உருவாக்கித் தந்த தமிழினப் பேரொளி பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்த நாள் இந்த நாள்.

1976 ஜனவரி 31 ! தமிழ்நாட்டில் நடைபெற்று வந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தலைமையிலான அண்ணா அவர்களின் கழக அரசைக் கலைத்து விட்டு குடியரசுத் தலைவர் ஆட்சி திணிக்கப்பட்டது.

அத்துடன், அண்ணா அரசின் காவலர்களாகத் திகழ்ந்த தளகர்த்தகர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டு பிப்ரவரி 1, 2 ஆகிய நாள்களில் தமிழ்நாடு முழுவதிலும் சிறைகளில் அடைக்கப்பட்டார்கள்.

அவர்கள் யார் யார்?

கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டவர்கள் யார் யார் என்ற விவரம்கூட அன்றைய செய்தி தணிக்கை முறையால் வெளியாகவில்லை. அந்நிலையில் பிப்ரவரி 3 ஆம் நாள் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாள் வந்தது.

ஒவ்வொரு மணித்துளியும் உயிரோடும் உணர்வோடும் ஒட்டி ஒன்றிப் பழகி வந்த உத்தம உடன்பிறப்புகள் எல்லாம் சிறைக் கொட்டடியில் வாட, உள்ளம் அனலாய்க் கொதித்த நிலையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், யார் யார் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்ற விவரத்தை மக்களுக்கு மறைமுகமாகத் தெரிவிக்கும் வகையில் ஓர் அற்புதமான முடிவை மேற்கொண்டார்கள்!

அந்த முடிவுதான்!

பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக அண்ணா நினைவிடத்திற்கு வரமுடியாதவர்கள் என்று ஒரு பட்டியலை முரசொலி இதழில் வெளியிட்டார்! அப்படி வரமுடியாதவர்கள் யார் யார்? அவர்கள்தான் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள்.

அதனால் தான் அவர்கள் அண்ணா அவர்களுக்கு அஞ்சலி செலுத்திட அண்ணா நினைவிடத்திற்கு வரமுடியாத நிலைக்கு ஆளானார்கள் என்று மறைமுகமாக வெளிப்படுத்தினார்கள். அதன் மூலம் தான் கைது செய்யப்பட்டவர்கள் யார் யார் என்பதைத் தமிழ்நாட்டு மக்கள் அறிய முடிந்தது!

இப்படி அன்று அண்ணா நினைவிடத்திற்கு வரமுடியாதவர்களில் ஒருவர் தான், இன்றைய நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்!

ஆம். அன்று அந்தப் பட்டியலில் அவர் பெயரும் இடம்பெற்றிருந்தது சென்னை சிறைச்சாலையில் அடைபட்டிருந்ததால்!

இன்று தமிழ்நாடு முதலமைச்சராக கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்களின் 57-ஆம் ஆண்டு நினைவு நாள் பேரணியைத் தலைமையேற்று, கழக முன்னணியினர், நிர்வாகிகள், உடன் பிறப்புகள் பல்லாயிரக்கணக்கில் உடன் வர, அண்ணா சிலையிலிருந்து அண்ணா நினைவிடம் வரை நடந்து வந்து, தமிழ்த்தாயின் தலைமகன் எனப் போற்றப்படும் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

இது திராவிட முன்னேற்றக் கழகத்தின் தியாக வரலாற்றில் பேரறிஞர் அண்ணா அவர்களின் வரலாற்றோடு பின்னிப்பிணைந்துள்ள தியாக முத்திரையாகும்.





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (3.2.2026) பேரறிஞர் அண்ணா அவர்களின் 57வது நினைவு நாளையொட்டி, வாலாஜா சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலை அருகிலிருந்து காமராஜர் சாலையில் அமைந்துள்ள அண்ணா நினைவிடம் வரை அமைதிப் பேரணி நடைபெற்றது. இப்பேரணியில் அமைச்சர்கள் துரைமுருகன், கே.என். நேரு, அமைச்சர் பெருமக்கள், இந்நாள் முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### குமரிமுனையில் –திருவள்ளுவர் சிலைக்கு படகுச் சவாரிக்கு மூன்று புதிய பயணிகள் படகுகளின் கட்டுமானப்பணி!

## ‘கோவா’ கப்பல் கட்டும் தளத்தில் - அமைச்சர் எ.வ.வேலு நேரில் ஆய்வு!

கோவா, பிப். 4-

கன்னியாகுமரியில் 31.12.2024 அன்று நடைபெற்ற அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா நிகழ்ச்சியின் போது, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்,

“முக்கடல் சங்கமிக்கும் குமரிமுனையில் இருந்து அய்யன் திருவள்ளுவர் சிலையை பார்ப்பதற்குச் சுற்றுலாப் பயணிகள் எளிதாக சென்றடையும் வகையில், படகுச் சவாரி வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் மூன்று புதிய பயணிகள் படகுகள் வாங்கப்படும்” என அறிவித்தார்.

இந்த மூன்று படகுகளுக்கும் பெருந்தலைவர் காமராசர், மார்சல் நேசமணி, ஜி.யு. போப் ஆகியோரின் பெயர்கள் சூட்டப்படும் என்றும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.

தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் நிதியில் மூன்று புதிய பயணிகள் படகுகள் வாங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, கோவாவில் உள்ள கப்பல் கட்டும் தளத்தில் இதற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று (3.2.2026) கோவா கப்பல் கட்டும் தளத்திற்குச் சென்று அங்கு நடைபெற்று வரும் (Synergy Shipyard, Goa) படகு கட்டுமானப் பணிகளை களஆய்வு செய்தார்கள்.

முதலாவதாக, பெருந்தலைவர் காமராசர் பெயரிடப்பட்ட பயணியர் படகு கட்டுமானப் பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளது. விரைவில் இதற்கான வெள்ளோட்டம் மற்றும் சோதனை ஓட்டம் (Sea Trial) நடைபெற இருக்கிறது. 2026 பிப்ரவரி மாத இறுதிக்குள் கன்னியாகுமரி துறைமுகத்தில், தமிழ்நாடு கடல்சார் வாரியத்திடம் பெருந்தலைவர் காமராசர் பெயரிட்ட முதல் பயணியர் படகினை ஒப்படைக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட இருக்கிறது.

மீதமுள்ள “மார்சல் நேசமணி, ஜி.யு.போப்“ ஆகிய இரண்டு படகு கட்டுமானப் பணிகளை விரைவில் நிறைவு செய்துதருமாறு கட்டுமான நிறுவன அலுவலர்களிடம் அறிவுறுத்தினார்கள்.

இந்த களஆய்வின்போது, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறைச் செயலாளர் மருத்துவர் இரா. செல்வராஜ், தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் முதன்மைச் செயலாளர் / துணைத் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் தி.ந.வெங்கடேஷ், மாநில துறைமுக அலுவலர் கேப்டன் ம.அன்பரசன் மற்றும் நெடுஞ்சாலைதுறையின் சிறப்பு அலுவலர் (தொழில்நுட்பம்) இரா.சந்திரசேகர் ஆகியோர் உடனிருந்தனர்.





பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் 57 வது நினைவு நாளை முன்னிட்டு 12வது மண்டல குழு தலைவர், ஆலந்தூர் தெற்கு பகுதிச் செயலாளர் என். சந்திரன் எம்.சி., தலைமையில் நங்கநல்லூரில் அமைந்துள்ள அண்ணா சிலைக்கு கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் சாய் ஜெய் காந்த், ஜெயராம் மார்த்தாண்டன், வட்டச் செயலாளர்கள் ஜெ. நடராஜன், இ. உலகநாதன்,டி. ஜெயசுதாஸ், ஏ.ஆர். சரவணன், ஏ. வேலவன், ஏ. சாலமோன் எம்.சி., எஸ் சுந்தர்ராஜன், இ. ரமேஷ், ஆர்.பாபு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமை! காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்

## ஆலந்தூர் தெற்கு பகுதி கழக செயல் வீரர்கள் கூட்டம்!

### பகுதி செயலாளர் என். சந்திரன் எம்.சி. அறிக்கை!

சென்னை, பிப்.4

12வது மண்டல குழு தலைவர், ஆலந்தூர் தெற்கு பகுதி செயலாளர் என். சந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் ஆலந்தூர் தெற்கு பகுதி சார்பில் இன்று (04.02.2026 புதன்கிழமை) மாலை 4.00 மணி அளவில் கத்திப்பாரா, மாவட்ட கழக அலுவலகத்தில் பகுதி கழக செயல்வீரர்கள் கூட்டம் குறு-சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சரும், காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளருமான, தா.மோ. அன்பரசன், தலைமையில் நடைபெற இருப்பதால்,

ஆலந்தூர் தெற்கு பகுதிக்கு உட்பட்ட, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக நிர்வாகிகள், பகுதி, வட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பகுதி பிரதிநிதிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி நிர்வாகிகள், பாக முகவர்கள், பாக டிஜிட்டல் முகவர்கள், கழக மூத்த முன்னோடிகள், மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

12வது மண்டல குழு தலைவர், ஆலந்தூர் தெற்கு பகுதி செயலாளர் என். சந்திரன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி சார்பில் தமிழ்நாடு தலைகுனியாது திராவிட மாடல் அரசின் 5 ஆண்டு சாதனை விளக்க தேர்தல் பரப்புரை மாபெரும் பொதுக்கூட்டம் மாவட்ட கழகத் துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன், கழக மருத்துவர் அணிச் செயலாளர் திட்டக்குழு உறுப்பினர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ ஆகியோர் அரசின் சாதனைகளை விளக்கி சிறப்புரை ஆற்றினார்கள். மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., துணை மேயர் கோ. காமராஜ், மண்டலத் தலைவர்கள் வே. கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, பகுதி கழகச் செயலாளர்கள் த. ஜெயக்குமார், இ. எஸ். பெர்னார்ட், ஏ.கே. கருணாகரன், ஒன்றிய செயலாளர் ஜி. கே.விவேகானந்தன்(எ) ரவி, இரா. பொன்ராம், அ. தமிழ்மாறன், மூ. ரஞ்சன், எல்.பிரபு, ரவிச்சந்திரன், கோ. ஜானகிராமன் ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தார்கள்.